செய்தி வெளியீடு நாள் : **16.11.2020**

**2020–21ம் ஆண்டிற்கான அரசு ஒதுக்கீட்டில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவ சேர்க்கை தரவரிசைப் பட்டியல்.**
**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் வெளியிட்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் இன்று **(16.11.2020)** சென்னை கீழ்பாக்கத்தில் உள்ள மருத்துவ கல்வி இயக்கக வளாகத்தில் **2020–21**ம் ஆண்டிற்கான அரசு ஒதுக்கீட்டில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவ சேர்க்கைக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டார்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த சீர்மிகு திட்டம், இந்தியாவிலேயே எந்தவொரு மாநிலத்தில் இல்லாத ஒன்று மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவத்தில் இளங்கலை படிப்புகளில் அரசு பள்ளிகளில் பயிலும் கிராமப் புற ஏழை எளிய மாணவர்களுக்கு **7.5** சதவீத உள் ஒதுக்கீடு வழங்குவதற்கான வரலாற்று சிறப்புமிக்க திட்டம். இதன் மூலம் புகழ்பெற்ற சென்னை மருத்துவக் கல்லூரி உட்பட அனைத்து மருத்துவக் கல்லூரிகளிலும் பயில்வதற்கான வாய்ப்பு அரசு பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார். **7.5** சதவீத ஒதுக்கீட்டில் தேனி மாவட்டம் சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் படித்த ஜீவித் குமார் என்பவர் முதல் மதிப்பெண் பெற்றுள்ளார்.

தற்பொழுது கோவிட் காலம் என்பதால் பொது சுகாதாரத் துறையின் உரிய நெறிமுறைகளின்படி சமூக இடைவெளியுடன் ஒரு நாளைக்கு **500** நபர்கள் கலந்து கொள்ளும் விதமாக நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நவம்பர் **18**–ம் தேதி காலை முதல் மருத்துவ சேர்க்கைக்கான கலந்தாய்வு நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு ஆஃப் லைன் என்ற நேரடி முறையில் கலந்தாய்வு நடைபெறுகிறது. தற்பொழுது கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு கலந்தாய்வின்போதே இருப்பிட சான்று, சாதி சான்று, மதிப்பெண் சான்று போன்ற அனைத்து சான்றிதழ்களையும் சரிபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் **24,712** விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் **23,707** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு **1,005** விண்ணப்பங்கள் நிராகரிகப்பட்டுள்ளது. அரசு பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கான ஒதுக்கீட்டில் **972** விண்ணப்பங்கள் பெறப்பட்டு **951** விண்ணபங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. **7.5** சதவீத ஒதுக்கீட்டில் தமிழ்நாடு அரசு பள்ளிகளில் பயின்ற கிராமப்புற ஏழை, எளிய மாணவர்கள் ஏறத்தாழ **313** மாணவர்களுக்கு மருத்துவ படிப்புகளிலும் **92** மாணவர்கள் பல் மருத்துவத்திலும் சேருவதற்கான வாய்ப்பினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார் என்றார்.

இந்நிகழ்வின்போது மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இஆப., மருத்துவக் கல்வி இயக்குநர் மரு. நாராயணபாபு, தேர்வுக் குழு செயலாளர் மரு. செல்வராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.